**பிரித்தானிய தமிழர் பேரவைக்கு (BTF) அதன் உறுப்பினர்களினதும் தமிழ்மக்களினதும் உருக்கமான வேண்டுகோள்:**

பிரித்தானியா வாழ் புலம்பெயர் தமிழ்மக்கள் ஆகிய நாங்கள், எந்த அரசியல்சார்பின்றியும், எந்த அமைப்புசார்பின்றியும், எவரின் நிர்ப்பந்தமின்றியும் இந்த வேண்டுகோளை பிரித்தானிய தமிழர் பேரவையிடம் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

ஈழத்தமிழர்களின் மனங்களில் ஆறாதவடுவாக பதிவாகியிருக்கும், முள்ளிவாய்க்கால் நினைவு தினமாகிய May 18 ஆம் நாளை "தமிழ் இனவழிப்பு நாளாக" பிரகடனம் செய்து, பல வருடங்களாக நினைவு கூர்ந்து வருகின்றோம். நாம் ஒரு தேசிய இனம் என்ற வகையில், இது எமது தேசிய துக்க தினமாகும். எந்த ஒரு இனத்தின் தேசிய தினமானாலும், அது எந்த நாட்டில் இடம்பெற்றாலும், அந்த இனத்தின் தேசியக்கொடி இல்லாமல் இடம்பெறுவதில்லை. அதன்படி, தமிழ் இனவழிப்பு நாளாகிய May 18 நினைவு தினமும் தமிழீழ தேசியக்கொடியேற்றலுடனேயே இடம்பெறவேண்டும்

எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில், எமது தழிழீழ தேசியக்கொடியின் கீழ் அணிதிரண்டு, தமிழீழ விடுதலைக்காகவும், தேசிய அடையாளங்களுக்காகவும் போராடி, பல்லாயிரக்கணக்கான மாவீரகளும் மக்களும் உயிர்த்தியாகம் செய்ததை நாம் மறந்துவிடலாகாது. எமது இனத்தின் தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களை November 27 அன்று நினைவு கூர்ந்து, தேசியக்கொடியேற்றி வீரவணக்கம் செய்கின்றோம். அது போலவே, இறுதிவரை விடுதலைப்போராட்டத்தில் தோளோடு தோள் நின்று, தமது உயிர்களை இழந்த எமது மக்களும் வீரமானவர்களே. அவர்களை நினைவுகூரும் May 18 ஆம் தினத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, அவர்களுடைய உயிர்த்தியாகங்கள் கௌரவிக்கப்பட வேண்டும்.

பிரித்தானியாவில் எமது தமிழீழ தேசியக்கொடி சட்டரீதியாக தடை செய்யப்படவில்லை என்பது தற்போது ஐயமறத்தெளிவாகியுள்ளது. பொதுநிகழ்வில் தேசியக்கொடி ஏற்றுவதனால் எந்தவிதமான சட்டச்சிக்கல்களும் ஏற்படாது என்பதை TCC மற்றும் TGTE ஆகிய அமைப்புக்கள் செயல்முறை மூலம் நிருபித்துள்ளார்கள். தேசியக்கொடியை தமது சின்னத்தில் கொண்ட LA PAIX OU SRILANKA மற்றும் TGTE ஆகிய அமைப்புக்கள், தொடர்ந்தும் UN மற்றும் பல உயர்மட்ட அரசதிணைக்களங்களுடன் செயற்பட்டு வருவதன் மூலம், தேசியக்கொடி ஏற்றுதல் எந்தவகையிலும் உங்கள் அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளையும் பாதிக்காது என்பதும் தெளிவாகின்றது.

Hyde Park இல் 18 May 2017 அன்று பிரித்தானிய தழிழர் பேரவை (BTF) ஆகிய உங்களால் நடாத்தப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தின நிகழ்வுகள் தமிழீழ தேசியக்கொடியேற்றலுடனேயே இடம்பெறவேண்டும் என்பதே பெரும்பான்மை BTF உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தமிழ் மக்கள் ஆகிய எமது ஏகோபித்த வேண்டுகோள் ஆகும். மக்களின் உணர்வுகளுக்கும் அபிலாசைகளுக்கும் மதிப்பளித்து, காழ்ப்புணர்வுகளையும், உள்நோக்கம் கொண்ட தன்னிச்சையான தீர்மானங்களை புறம்தள்ளி, சுயநல எண்ணங்களை விடுத்து, மக்கள் ஆணைப்படி செயற்படுவதன் மூலம், BTF என்பது தமிழ் இனத்தின் விடுதலைக்காக போராடும் ஒரு உண்மையான மக்கள் அமைப்பு என்பதை நிரூபிக்கும்படி, இந்த விண்ணப்பத்தில் கையொப்பம் இடுவதன் மூலம், BTF இன் தற்போதைய தலைமையிடம் நாம் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றோம். வெவ்வேறு வழிகளில் பயணித்தாலும், தமிழீழ விடுதலை என்ற ஒரே இலக்கில் எல்லா தமிழ் அமைப்புக்களும் ஒருங்கிணைய வேண்டும் என்பதே எமது ஒரே நோக்கமாகும்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 2000க்கு மேற்பட்ட கையெழுத்துக்கள், ஒரு கிழமைக்குள் பெறப்பட்டவை. இந்தளவு பெருந்தொகையான கையெழுத்துகளை இந்த குறுகிய கால அவகாசத்தினுள் பெறமுடிந்தமையானது, பெரும்பான்மையான தமிழ் மக்களும், பிரமுகர்களும், முன்னாள் போராளிகளும் எமது மேற்படி கருத்தையும் இந்த கோரிக்கையையும் முழுமையாக ஆதரிக்கிறார்கள் என்பதை நிருபிக்கின்றது. அத்துடன் உண்மையாக மக்கள் நலனுக்கான இயங்கும் பல பொது அமைப்புக்களும் எங்களுடைய இந்த முயற்சிக்கு முழு ஆதரவு வழங்கியுள்ளன.

பொதுமக்களாகிய எமது நலனை முன்னிறுத்தி, எமது விடுதலைக்காக, எமது அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தி செயற்படும் பொது அமைப்பு என்ற அடிப்படையில் நீங்கள் நிச்சயமாக எமது விண்ணப்பத்திற்கு செவிசாய்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகின்றோம். இந்த ஜனநாயக நாட்டில் நீங்கள் எமது ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளித்து ஜனநாயக அமைப்பாக செயற்படுவீர்கள் என நம்புகிறோம். அதன்படி பெரும்பான்மை மக்களின் கருத்தை மதித்து தேசியக்கொடியேற்றலுடனேயே முள்ளிவாய்க்கால் நிகழ்வை நடாத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். முடியாவிட்டால், மக்கள் எழுச்சிக்கான, இது போன்ற தேசிய நிகழ்வுகளை நடாத்துவதில் இருந்து தயவு செய்து விலகுங்கள். அவ்வாறு விலகும் பட்சத்தில், மக்களாகிய எங்களை நீங்கள் மதிக்காவிட்டாலும், நீங்கள் முன்வைக்கும் காரணங்களை நாங்கள் மதித்து, உங்கள் இராஜதந்திர வேலைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளோம்.

**மக்கள் ஆணைக்கு கட்டுப்படாத எந்த பொதுஅமைப்பும் அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்த அருகதையற்றது. இதற்கு மேலும் உங்கள் தனிப்பட்ட முடிவுகளை எம்மீது திணிக்க முற்பட்டால், நாங்கள் எமது உறுப்புரிமை மற்றும் ஆதரவுகளை முற்றுமுழுதாக விலக்கும் நிலைக்கு தள்ளப்படுவோம். நீங்கள் எங்கள் பிரதிநிதிகள் அல்ல என்பதையும் உலகறியச்செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கும் தள்ளப்படுவோம்.**